**தலைப்பு 216 - சமூக சேவைகள் திணைக்களம்**
-------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 216 - சமூக சேவைகள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 ஏப்ரல் 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

| **கடந்த ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தித் தொடர்பு** | **அமுல்படுத்தியிருக்காத பரிந்துரைகள்** | **இவ்வறிக்கையின் பந்தித் தொடர்பு** |
|---|---|---|
| 1.6.1. (அ) | தொழில்சார் பயிற்சி நிறுவனம், புனர்வாழ்வு மத்திய நிலையம் மற்றும் வழிகாட்டல் மத்திய நிலையம் என்பவற்றை தாபிப்பதற்காகத் திணைக்களத்திற்கு அன்பளிப்பாகக் கிடைத்த 33 ஏக்கர் பரப்பு அளவினை கொண்ட 05 காணித் துண்டுகள் அன்பளிப்பு செய்யப்பட்டு 10 ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் கடந்திருந்த போதிலும், அந்த காணிகளின் அல்லது அதில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு காணி மற்றும் கட்டடங்களாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 1.6.1. (அ)(ஆ) |

| | | |
|---|---|---|
| 2.6 (ஆ) | அரச வாகனம் ஒன்றைக் கற்றல் உதவியாகப் பயன்படுத்துவதாயின் சரியான நடைமுறைகளுக்கு அமைய வாகனம் அகற்றப்பட்டு பதிவினை இரத்து செய்ததன் பின்னரே அது மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும், ஓட்டக்கூடிய நிலைமையில் காணப்படும் பதிவு இலக்கத் தகட்டினைக் கொண்டுள்ள நிசான் வகையிலான டபுள் கெப் கட்டவல தொழில் பயிற்சி நிறுவனத்தில் மோட்டார் இயந்திரவியல் கற்பதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. மோட்டார் வாகன ஆணையாளரின் தகவல்களுக்கு அமைய அந்த வாகனம் பெண்கள் வலுவூட்டல் மற்றும் சமூக நலனோம்பல் அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் கற்றல் உதவியாக ஈடுபடுத்துதல் முறையான அதிகாரம் இல்லாது மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2.3 |

## 1.6. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

**மூலதன செலவினம்**

நிதிக்கூற்றுக்களிற்குரிய மூலதன செலவினத்தை கணக்கீடு செய்கையில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தொழில் பயிற்சி நிறுவனம், புனர்வாழ்வு மத்திய நிலையம் மற்றும் வழிகாட்டல் மத்திய நிலையம் என்பவற்றைத் தாபிப்பதற்காகத் திணைக்களத்திற்கு அன்பளிப்பாகக் கிடைத்திருந்த சுமார் 29 ஏக்கர் பரப்பளவினைக் கொண்ட 06 காணிகள் அன்பளிப்பு செய்யப்பட்டு 11 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்திருந்த போதிலும், அந்தக் காணிகளின் மற்றும் அதில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டடங்களின் பெறுமதி | சுவீகரிப்பு செய்யப்படாத காணி மற்றும் கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிக்கை சுவீகரித்தல் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | காணி மற்றும் கட்டடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மதிப்பீடு செய்யப்பட்டு காணி மற்றும் கட்டிடங்கள் எனக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) 07 தொழில் பயிற்சி நிறுவனங்கள் தாபிக்கப்பட்டிருந்த காணிகளினது சட்டரீதியான உரிமையை திணைக்களம் சுவீகரித்திருக்காமை மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு இருக்காதுடன் கடந்த 11 வருடத்திற்கும் அதிக காலத்தினுள் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டடங்களின் மொத்த செலவு இனம் காணப்பட்டு நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கட்டடங்கள் மற்றும் நிர்மாணிப்பு என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுவீகரிப்பு செய்யப்படாத காணி மற்றும் கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிக்கை சுவீகரித்தல் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | காணி மற்றும் கட்டடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் ஏற்பாடுகளிற்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதி செய்தல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டுத் தொகுதியொன்றைத் தயாரித்து நடாத்திச் செல்லுவதாகப் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டியதுடன் அத் தொகுதியின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் | தொகுதியின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாகக் காலத்துக்கு காலம் மீளாய்வு மேற்கொள்ளப்படும் எனவும், தொகுதி ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்லுவதற்குத் தேவையான மாற்றங்களும் மேற்கொள்ளப்படுவதுடன் எதிர்காலத்தில் இவ்வாறு மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | உள்ளகக் கட்டுப்பாட்டுத் தொகுதியினை ஆக்கபூர்வமானதாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான மீளாய்வுகள் மற்றும் மாற்றங்களை மேற்கொண்டு அந்த அறிக்கையினை கணக்காய்வு தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல் வேண்டும் |

தொகுதியை ஆக்கபூர்வமாக நடாத்திச் செல்லத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும், அம்மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொண்டமைக்கான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் அதிகாரமின்றி பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அரச வாகனம் ஒன்றைக் கற்றல் உதவியாகப் பயன்படுத்துவதாயின் சரியான நடைமுறைகளுக்கு அமைய வாகனம் அகற்றப்பட்டு பதிவானது மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இரத்து செய்யப்பட்டதன் பின்னர் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் வத்தேகம தொழில் பயிற்சி நிறுவனத்தில் உள்ள 5 வாகனங்களினது செசி இலக்கத்துடனேயே கற்றல் உதவிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. மேலும் வத்தேகம தொழில் பயிற்சி நிறுவனத்தில் இருந்த 19 மோட்டார் சைக்கிள்களே கெட்டவல தொழில் பயிற்சி நிறுவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு இருந்த போதிலும் மோட்டார் சைக்கிள்களின் இலக்கத் தகடுகளுடன் அந்த நிறுவனத்தில் வைக்கப்பட்டிருந்தன. | பதிவினை இரத்துச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளைச் செய்து தருமாறு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திடம் எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது. | வாகனத்தின் பதிவு இரத்துச் செய்யப்பட்டு அகற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. நோக்கு மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் செயற்பணியான “இலக்காகக் கொள்ளப்பட்ட சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் வலுப்படுத்தலின் மூலம் சமூக ஒருங்கிணைப்பு நோக்கில் நிறுவனங்களுக்கு இடையிலான தொடர்பு மற்றும் தொழில் ரீதியான தலையீடு மூலம் புதிய உற்பத்தி உருவாக்கங்களின் மூலம் விரைவாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமான ஆராய்ச்சிகளை நடாத்துதல், கொள்கை உருவாக்கம் மற்றும் வேலைத் திட்டங்களை நடத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பலன்களை எட்டுதல்” என்பதற்காக திணைக்களம் மேற்கொண்டு பணிகளில் புதிய உற்பத்தி உருவாக்கங்களின் ஊடாக விரைவான, வினைத்திறனான மற்றும் ஆக்கபூர்வமான ஆராய்ச்சிகளை நடாத்துதல் மற்றும் கொள்கை உருவாக்கல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் போதிய அளவிலான செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | சிறு தொழில் முனைவோர்களுடன் இணைந்து தொழில் பயிற்சி நிறுவனங்களில் பாடநெறியினைப் பின்பற்றி பூர்த்தி செய்த பயிலுனர்களுக்கு வியாபார திட்டங்களை தயாரித்தல். அதன் மூலம் சுய தொழிலுக்கு இளைஞர் யுவதிகளை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பது. | எதிர்பார்க்கப்பட்ட பலன்களை எட்டுவதற்கு ஏற்ற வகையில் விரைவில் புதிய உற்பத்தி உருவாக்கங்களின் ஊடாக வினைத்திறனான மற்றும் ஆக்கபூர்வமான கொள்கை உருவாக்கங்கள் செய்யப்படுதல் வேண்டும். |

### 3.2. பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பார்வை குறைபாடு நிதியத்தின் கீழ் பார்வை குறைபாடுள்ள 10 நபர்களுக்கு விளையாட்டுகளுக்கான உதவி வழங்குவதற்கு ரூபா. 100,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் | விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்கு நிதி போதிய அளவில் இல்லை என்பதனால் மற்றும் ஏனைய செலவுகளுக்கு ஒதுக்கப்பட்ட | குறித்த நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு நிதியானது விரைவில் ஈடுபடுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| எந்த ஒரு நபருக்கும் உதவி வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதி போதிய அளவில் இல்லாத காரணத்தால் விளையாட்டு உதவிக்காக ஒதுக்கப்பட்ட நிதி அத்தியாவசிய செலவுகளுக்கு ஈடுபடுத்தப்பட்டது என்பது. | |

**3.3 எதிர்பார்த்த நலன்களைப் (Outcome ) பெற்றுக்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்டு 2022 திசெம்பர் 20 ஆம் திகதி திறக்கப்பட்ட கிளிநொச்சி தொழில் பயிற்சி மத்திய நிலையத்தின் நிர்மாணிப்பிற்காக ரூபா. 1,280,000 செலவிடப்பட்டிருந்ததுடன் காணியின் பெறுமதி ரூபா. 93,630,000 ஆகும். மீளாய்வாண்டின் மே மாதத்தில் இரண்டு பாடநெறிகளுக்காகப் பயலுனர்கள் சேர்க்கப்பட்டு பாடநெறி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 ஜனவரி வரையிலும் பயிற்றுவிப்பாளர்கள் இல்லாததனால் பாடநெறி நிறுத்தப்பட்டிருந்தது. அனைத்து வசதிகளுடன் பாரிய நிதி செலவீட்டில் அமைக்கப்பட்ட இந்த தொழில் பயிற்சி மத்திய நிலையத்தில் இதுவரையில் மத்திய நிலையப் பொறுப்பதிகாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகிய உத்தியோகத்தர்கள் மட்டும் இணைக்கப்பட்டு பயன்பாடின்றி இருப்பதுடன் பாதுகாப்புப் பிரிவிற்கு மற்றும் சுத்திகரிப்புப் பிரிவுக்காகவும் கொடுப்பனவு செய்யப்பட்டு வருகின்றது. அதற்கு அமைய இந்த மத்திய நிலையத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு தவறியிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் நிறுவனத்தினை முறையாக நடத்துவதற்குத் தேவையான பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதனால் நோக்கத்தினை செயல்படுத்த முடியும் என்பது. | மத்திய நிலையத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 3.4. நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயன்முன்னேற்றத்தினைப் பெற்றுக் கொண்டிருக்காத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பல்வேறு திறன்களைக் கொண்ட ஊனமுற்ற நபர்களுக்காக நடத்தப்பட்ட தொழில் பயிற்சியினை கடந்த வருடத்தில் வெற்றிகரமாக பூர்த்தி செய்த பயிலுகர்களுக்கு உபகரணத் தொகுதியினை வழங்குவதற்காக மீளாய்வாண்டினுள் ரூபா. 5,000,000 இற்கான நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் கடந்த வருட வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின்படி தொழில் பயிற்சியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்த 451 பயிலுனர்கலளில் 5 பயிலுனர்களுக்கு மட்டும் ரூபா. 50,000 பெறுமதியான உபகரணத் தொகுதி வழங்கப்பட்டிருந்தது. இதனால் ரூபா. 4,950,000 நிதி பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | ஒவ்வொரு பயிலுனர்களுக்கும் பொருத்தமான வகையில் முறையான சிறு தொழில் பிரிவு வளங்களின் பங்களிப்பினைப் பெற்றுக் கொண்டு தொழில் திட்டம் தயாரிக்கப்பட்டு உபகரணத் தொகுதியினை வழங்கிய காரணத்தால் தாமதம் ஏற்பட்டது எனினும் தற்போது தனிநபர் அபிவிருத்தித் திட்டம் அனைத்தும் பயிலுனர்களுக்குத் தயாரிக்கப்பட்டு அதற்கு அமைய சுய தொழில் செய்வதற்குப் பொருத்தமான நபர்கள் இனம் காணப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதனால் 2024 ஆம் ஆண்டில் அனைத்து உபகரணத் தொகுதிகளையும் வழங்குதல் தாமதம் இன்றி மேற்கொள்ள முடியும் என்பது. | தாமதமின்றி உபகரணத் தொகுதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

## 3.5. வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஓகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியதாக இருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் தூரநோக்கிற்கு அமைய மீளாய்வாண்டு வரையில் இலக்காகக் கொள்ளப்பட்ட சமூகத்தின் உரிமைகள் மற்றும் சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை எட்டியமைக்கான முன்னேற்றம் செயலாற்றுகை அறிக்கையில் முன்னைய ஆண்டைப் போலவே மீளாய்வாண்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் செயலாற்றுகைக்கான இலக்கு வழங்கப்பட்டு அதற்கு உரியதான முன்னேற்றத்தினை பெற்றுக் கொள்ளும் முறைமையைத் தயாரித்தல் மற்றும் அந்தத் தகவல்களை எதிர்காலத்தில் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | முழுமையான செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 3.6. சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 1992 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மொத்த செலவு குறிப்பிடப்படாத திணைக்களத்திக்குச் சொந்தமான தண்ணீர் பவுசர் 2021 ஓகஸ்ட் 11 ஆம் திகதி விசேட ஆய்வுக் குழுவின் மூலம் திருத்தல் செய்தல் பொருளாதார ரீதியில் பலனற்ற வாகனங்களின் கீழ் இனம் காணப்பட்டு அகற்றுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அகற்றல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. | தண்ணீர் பவுசரை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அகற்றலின் போது இந்த வாகனத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு அமைய கொள்வனவாளருக்கு வழங்கியதன் பின்னர் அவருக்கு வாகனத்தின் உரிமையை சமூக சேவைகள் திணைக்களத்தின் மூலம் ஒப்படைக்கும் அடிப்படையில் குறித்த பணியினை பூர்த்தி செய்யுமாறும், 2023 ஓகஸ்ட் 31 ஆம் திகதி இடப்பட்ட கடிதத்தின் மூலம் மொனராகலை மாவட்ட செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | அகற்றல் நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்துக்கு சொந்தமான வாகனங்களினுள் மொத்த செலவு இனம் காணப்படாத அமுனுகும்புற மற்றும் தெளம்புயாய தொழில் பயிற்சி நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட இரு டிராக்டர் வண்டிகள் சொத்துக்களில் உள்ளடக்கப்படாததால் அந்த சொத்துக்கள் காணாமல் போவதற்கு அல்லது தவறாகப் பயன்படுத்துவதற்கு அதிக சந்தர்ப்பம் காணப்படுவதுடன், திணைக்களத்தின் எவ்விதமான பணிக்காக இந்த டிராக்டர் வண்டி கொள்வனவு செய்யப்பட்டது என்பதும் வெளிப்படுத்தப்படவில்லை. | ஒரே இலக்கத்தில் இரண்டு கை டிராக்டர்கள் உள்ளன என்பதால் மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களத்தின் மூலம் உறுதிப்படுத்திக் கொண்டு மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பது. | கொள்வனவு செய்யப்பட்ட டிராக்டர் வண்டிகள் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | மோசமான நிலைமையில் காணப்படும் நெடுஞ்சாலை அமைச்சுக்கு சொந்தமான வேன் வண்டி மற்றும் சுகாதார அமைச்சுக்கு சொந்தமான ஜீப் வண்டி என்பன பல வருடங்களாக வத்தேகம தொழில் பயிற்சி நிறுவனத்தில் பயன்பாடு இன்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அந்த இரு வாகனங்களையும் கற்றல் உதவிக்காகப் பயன்படுத்துவதற்கு அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மீளாய்வாண்டிலும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த வாகனங்களை கெட்டவல நிறுவனத்திற்கு கொண்டு செல்வதற்கு முறையான வகையில் விலை மனு கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது மற்றும் அந்த பணி நிறைவேற்றப்பட்டதன் பின்னர் கற்றல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படும் என்பது. | கற்றல் உதவியாகப் பயன்படுத்துவதற்கு அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் தொழில் பயிற்சி பாடநெறிகளுக்காக 11 தொழில் பயிற்சி மத்திய நிலையங்களின் ஆட்சேர்ப்பினை கவனத்தில் கொள்ளும்போது 6 மத்திய நிலையங்களில் தங்குமிட வசதிகள் மற்றும் பயிற்சியினை பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் 450 பேருக்கு காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் 288 பேர் | 2024 ஆம் ஆண்டில் நோக்குநிலை வேலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் பயிலுனர்கள் பாடநெறிகளை இடைநிறுத்துதலைக் குறைத்துக் கொள்ள முடியும் என்பது. | தொழில் பயிற்சி மத்திய நிலையங்களுக்கு பயிற்றுவிப்பாளர்களை விரைவில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மட்டுமே பயிற்சியினைப் பெற்றுக் கொண்டிருந்ததனால் அந்த 06 மத்திய நிலையங்களும் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. | | |

### 3.7. முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| இலங்கையில் மீளாய்வாண்டு வரையில் விளிம்பு நிலைக்கு மற்றும் பின் தங்கிய நிலைக்கு தள்ளப்பட்ட சமூகத்தின் தன்மை, தொகை மற்றும் அவர்கள் புவியியல் ரீதியில் பரந்துள்ளமை தொடர்பான புள்ளி விபரம், வருடாந்தம் அதில் புதிதாக சேரும் தொகை தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட தரவுகள், திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் வருடாந்தம் வலுப்படுத்தப்பட்ட சமூகம் தொடர்பான விரிவான புள்ளி விபரம், தரவுகள் மற்றும் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட தரவு ஒழுங்கமைப்பொன்றைப் பேணிச் செல்லுவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊனத்துடனான நபர்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட தரவு ஒழுங்கமைப்பினை தயாரிப்பதற்காக ஊாடைன குரனெ நிறுவனத்துடன் இணைந்து ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது. | விரிவான புள்ளி விபரங்கள், தரவுகள் மற்றும் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட தரவு ஒழுங்கமைபொன்றினைப் பேணிச் செல்லுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 4. நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான அபிவிருத்தி நோக்கங்களின் கீழ் இனம் காணப்பட்டிருந்த முதலாவது அபிவிருத்தி நோக்கமான 2023 ஆம் ஆண்டளவில் கல்வியில் | பிரதேச செயலக அலுவலகத்தில் இணைக்கப்பட்டுள்ள சமூக சேவை உத்தியோகத்தர்களின் | 2030 ஆம் ஆண்டளவில் நிலையான அபிவிருத்தி நோக்கினை நிறைவேற்றிக்கொள்ளக் கூடியதான வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | ஆண் பெண் எனும் பாலின அடிப்படையிலான பாகுபாட்டை நீக்குதல், கல்வியில் அனைத்து தரங்களுக்கும் பிரவேசித்தலை உறுதிப்படுத்துதல் மற்றும் ஊனமுற்ற நபர்களுக்கு, சுதேச பிரஜைகளுக்கு மற்றும் ஆபத்துக்குள்ளாகக் கூடிய பிள்ளைகளுக்கு தொழில் பயிற்சியினைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்துதல் என்பதான போதிலும் திணைக்களத்திடம் நாடு முழுவதிலும் பரந்துள்ள ஊனமுற்ற நபர்கள், ஆபத்துக்குள்ளாக கூடிய பிள்ளைகள் போன்ற இந்த நோக்கத்திற்கு உரித்தான தரப்பினர் அல்லது எண்ணிக்கை மற்றும் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட தரவு ஒழுங்கமைப்பொன்று இல்லாத காரணத்தால் வருடாந்த வெற்றிச் சுட்டியின் மூலம் 2030 ஆம் ஆண்டளவில் அந்த நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான திறன் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. | மூலம் இந்த ஊனமுற்றவர்களாக அடையாளம் காணப்பட்ட சமூகத்திற்கு புனர்வாழ்வு திட்டம் தயாரிக்கப்பட்டு தேவையான சேவைகள் இனம் காணப்பட்டு முறையான வகையில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் தற்போது 5879 பேருக்கு புனர்வாழ்வு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது. மற்றும் ஊனத்துடனான நபர்கள் 177,809 பேர் தற்போது நாடு முழுவதிலும் இனம் காணப்பட்டு உள்ளதுடன் முறையான தரவு ஒழுங்கமைப்பொன்றைத் தயாரிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பது. | நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2030 ஆம் ஆண்டளவில் ஊனமுற்ற நபர்கள் மற்றும் இளைஞர்களும் உள்ளடக்கப்பட்டு அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கு பயனுள்ள மற்றும் பாதுகாப்பான வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்தல் நிலையான அபிவிருத்தி நோக்கத்தின் கீழ் இனம் காணப்பட்டிருந்த இரண்டாவது அபிவிருத்தி நோக்கமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் 214 பேருக்கு மட்டும் அந்த சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருந்தன. நாடு முழுவதும் உள்ளடங்க கூடிய வகையில் இற்றைப்படுத்தப்பட்ட ஊனமுற்ற நபர்களினது மற்றும் இளைஞர்களது தரவு | 2030 ஆம் ஆண்டளவில் நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு ஏற்ற வகையில் 2024 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையிலும் இலக்கினை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | நாடு முழுவதும் உள்ளடங்கக்கூடிய வகையில் வருடாந்தம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு காட்டப்பட வேண்டியதுடன் தரவு ஒழுங்கமைப்பொன்றைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

ஒழுங்கமைப்பொன்று இல்லாது 230 ஆம் ஆண்டளவில் இந்த நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு மீளாய்வாண்டில் போதிய அளவு இலக்கு வெற்றி கொள்ளப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் உறுதிப்படுத்தல் காணப்படவில்லை.